எனது இல. IRM/RTI/AO/info

RTI ஆலோசனை 01

அனைத்து பிரிவுத் தலைவர்களுக்கும்

**2016 இல. 12 ஐக் கொண்ட தகவலறியும் உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்**

இல. 2004/66 ஐக் கொண்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் மூலம் 2016 இல. 12 ஐக் கொண்ட தகவலறியும் உரிமைச் சட்டமானது, 2017 -02 -03 ஆந் திகதியில் இருந்து வலுப்படுத்தப்பட்டுள்ளது. இச் சட்டம் மற்றும் அதற்குரிய வர்த்தமானி அறிவித்தல், உபயோகிக்க வேண்டிய மாதிரிப்படிவங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் என்பனவற்றை www.documents.gov.lk இணையத்தளத்தின் ஊடாக பெற்றுக் கொள்ள முடியும்.

இது சம்பந்தமாக அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் தகவலறியும் அலுவலராக மேலதிகச் செயலாளர் (புலனாய்வு, ஆராய்ச்சி மற்றும் கண்காணிப்பு) திருமதி பீ.எம்.எம்.எம். பஸ்நாயக்க அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ் அமைச்சின் தகவல் அலுவலருக்கு ஒத்துழைப்பு வழங்கும் பொருட்டு அமைச்சின் அனைத்து பிரிவுகளிலும் இருந்து பதவிநிலை அலுவலர் ஒருவரரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய தகவலறியும் உரிமைச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு எல்லா வகையிலும் பின்வரும் செயன்முறைக்கு அமைய நடவடிக்கை எடுக்கவேண்டியது இன்றியமையாததாகும்.

**1. தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்தல்**

தகவலறியும் பொருட்டு இவ் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்படும் எல்லா வேண்டுகோள்களும் அமைச்சின் தகவல் அலுவலரான மேலதிகச் செயலாளரிடம் (புலனாய்வு, ஆராய்ச்சி மற்றும் கண்காணிப்பு) சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். சிலவேளை ஏதாவது ஒரு பிரிவிடம் இருந்து நேரடியாக தகவல்களைப் பெற வேண்டியிருப்பின், அவ் வேண்டுகோள் குறித்த பிரிவின் தகவல் அலுவலரின் மூலம் அமைச்சின் தகவல் அலுவலருக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். தகவல்கள் கோருவது தொடர்பாக வர்த்தமானியின் கட்டளை இல. 04 ஐக் பார்வையிடவும்.

அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்படும் அனைத்து தகவல்கள் கோரல் விண்ணப்பங்கள் தொடர்பாகவும் வெவ்வேறாக தொடர் இலக்கம் வழங்கப்பட்டு ( பதிவுசெய்யும் பதிவேடு) பேணுவதற்கு அமைச்சின் தகவல் அலுவலரினால் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். அமைச்சின் தகவல் அலுவலரினால் வழங்கப்படும் தொடர் இலக்கத்தை அடிப்படையாக வைத்து ஒவ்வொரு பிரிவினாலும் அப் பிரிவுக்கு உரிய தகவலறியும் கோரிக்கை தொடர்பாகவும் அப் பிரிவின் தகவல் அலுவரினால் வெவ்வேறாக பதிவேடுகள் பேணப்படுதல் வேண்டும்.

## 2. தகவல்களை வழங்குதல்

அமைச்சின் தகவல் அலுவலரின் ஊடாக ஏதாவது பிரிவிடம் தகவலறியும் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் வேளையில், இயலமானளவு துரிதமாக அத் தகவல்களை அமைச்சின் தகவலறியும் அலுவலருக்கு வழங்குவதற்கு குறித்த பிரிவின் தகவல் அலுவலரினால் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

ஏதாவது ஒரு தகவல் வழங்குவது குறித்து நிச்சயமற்ற தன்மை காணப்படுமாயின் அமைச்சின் தகவல் அலுவலர் மற்றும் குறித்த பிரிவின் தலைவர் அது பற்றி கலந்தாலோசித்து தீர்வு ஒன்றுக்கு வருதல் வேண்டும். ஏதேனுமொரு தகவலை வழங்குவது சம்பந்தமாக மூன்றாந் தரப்பின் உடன்பாட்டினை பெற்றுக் கொள்ள வேண்டியிருப்பின் குறித்த பிரிவின் தகவல் அலுவலர் மூலம் அதுபற்றி அமைச்சின் தகவல் அலுவலருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும். அதற்கமைய அமைச்சின் தகவல் அலுவலரினால் அத் தகவல்களை வழங்குவது தொடர்பாக குறித்த மூன்றாந் தரப்பின் உடன்பாட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் தகவல்களை வழங்குவது தொடர்பாக மேலதிகமாக நேரகாலம் தேவைப்படுமென தகவல் கோரும் தரப்பினரை அறிவுறுத்துவதற்கு அமைச்சின் தகவல் அலுவலரினால் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

## 3. தகவல்களை வழங்குவதை நிராகரித்தல்

தகவலறியும் உரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு கீழ்ப்பட்டு கோரப்படும் ஏதாவதொரு தகவலை வழங்குதவற்கு முடியாதுவிடின், அச் சட்டத்தின் 05 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு காரணத்தின் அடிப்படையில் என்பது பற்றி குறித்த பிரிவின் தகவல் அலுவலரினால் தெளிவாக குறிப்பிடப்பட்டு அமைச்சின் தகவல் அலுவலரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

சட்டத்தின் 25(2) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விண்ணப்பித்த தினத்தில் இருந்து 14 வேலைநாட்களுக்குள் விண்ணப்பித்த தரப்பினருக்கு தகவல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். 25(5) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் காரணத்தினால் தகவல்களை வழங்குவதற்கு மேலதிக கால அவகாசம் தேவைப்படுமாயின், அது பற்றி தகவல் கோரிய தரப்பினரை 14 நாட்களுக்குள்

அறிவுறுத்துவதற்கு இயலுமானவாறு குறித்த பிரிவின் தகவல் அலுவலரினால் அமைச்சின் தகவல் அலுவலருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

## 4. தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு கட்டணம் அறவிடல்

தகவல் வழங்குவது தொடர்பாக கட்டணம் அறவிட வேண்டிநேரிடும் சந்தர்ப்பத்தில் தகவல் வழங்கும் பிரிவின் தகவல் அலுவலரினால் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள, "தகவலறியும் உரிமை தொடர்பான ஆணைக்குழு விதி 2017" இன் கீழ் (04) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் அறவிட வேண்டிய கட்டணங்களை தீர்மானித்து அது பற்றி அமைச்சின் தகவல் அலுவலருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும். அதற்கமைய தகவல் கோரும் தரப்பினரிடமிருந்து குறித்த வர்த்தமானியின் ஏற்பாடுகளுக்கு அமைய கட்டணம் அறவிடுவதற்கு அமைச்சின் தகவல் அலுவலரினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

தகவல் வழங்கும் செயற்பாட்டிற்கு உரிய தொடர்பாடல் அலுவல்களை, மேற்படி வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் மூலம் மேற்கொள்வதற்கு அமைச்சின் தகவல் அலுவலரினால் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

இது சம்பந்தமாக மேலதிக விளக்கங்கள் தேவைப்படுமாயின், அமைச்சின் தகவல் அலுவலர், மேலதிக செயலாளர் ((புலனாய்வு, ஆராய்ச்சி மற்றும் கண்காணிப்பு) திருமதி பீ.எம்.எம்.எம். பஸ்நாயக்க அவர்களைத் தொடர்பு கொள்ளும்படி அறியத் தருகின்றேன்.

ஜே.ஜே. ரத்னசிறி
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

பிரதி – பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் தகவல் அலுவலர் – அறிந்துகொள்வதற்காக